F TJ

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 X 1 = 10

1. மொத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பலும், ஐம்பெருங் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும், பெருங் கலன்களும்
இ) ஐம்பெருங் காப்பியங்களும், அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பலும், அணிகலன்களும்

2. முல்லைப்பாட்டு .............. அடிகளைக் கொண்டது. அ) 130 ஆ) 108 இ) 103 ஈ) 133

3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை? அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

4. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" – என்று பாடியவர் யார்?
அ) கம்பர் ஆ) திருவள்ளுவர் இ) பாரதியார் ஈ) ஔவையார்

5. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்த காரணமாக அமைவது ................
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

6. 'பச்சை நிழல்' என்ற நூலின் ஆசிரியர் ..............
அ) பாரதியார் ஆ) உதயசங்கர் இ) மா. நன்னன் ஈ) பாரதிதாசன்

பாடலைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்

7. இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல் ............
அ) முல்லைப்பாட்டு ஆ) புறநானூறு இ) காசிக்காண்டம் ஈ) மலைபடுகடாம்

8. இப்பாடலின் ஆசிரியர் ..............
அ) அதிவீரராம பாண்டியன் ஆ) இளங்கோவடிகள் இ) ஔவையார் ஈ) தமிழழகனார்

9. இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
அ) விருந்தினன், வியத்தல் ஆ) திருந்துற, எழுதல்
இ) விருந்தினன், திருந்துற ஈ) வியத்தல், நன்மொழி

10. நன்மொழி – இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

II எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 2 = 6

11. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

12. வசன கவிதை – குறிப்பு வரைக.

13. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

14. 'விடும்' – என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

III எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. (வினா எண். 15 கட்டாய வினா) 3X2=6

15. 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' - இவ்வடியில் உள்ள எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

16. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்சொற்களை எழுதுக.
i) Discussion ii) Folk literature

17. பழமொழிகளை நிறைவு செய்க. அ) உப்பிலாப் ............... . ஆ) அளவுக்கு ............... .

18. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) வட்டத்தொட்டி ஆ) கீரிபாம்பு

IV எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 X 3 = 6
(வினா எண். 21 கட்டாயமாகவிடையளிக்கவும்

19. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடரில் அமைக்க.

20. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

21. கீழ்க்காணும் மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.
அ) 'அன்னை மொழியே' - எனத்தொடங்கும் பாடலை எழுதுக.
ஆ) 'சிறுதாம்பு தொடுத்த' – எனத்தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலை எழுதுக.

V எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 X 3 = 6

22. உண்டது. உண்ணாதது, படித்தது, படிக்காதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது - இவ்வினை முற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றுக.

23. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல், கண்ணெண்ணாம்
கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

24. உங்கள் ஊரில் புயல் வீசப்போகிறது என்ற அறிவிப்பு வருகிறது. அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காக்கும் வகையில் செய்யும் செயல்கள் மூன்றை எழுதுக.

VI அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 2 X 4 = 8

25. அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. *(அல்லது)*
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



VII கட்டுரை வடிவில் விடை தருக. 1 X 8 = 8

27. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.
*(அல்லது)* உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.
ஆ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*
அன்னமய்யா என்னும் பெயருக்கு அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593